# பெண்கள் மீது நிகழ்த்தப்பட்ட வன்கொடுமைகள்

*முனைவர் பெ. ஜெயச்சந்திரன்*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
அரசினர் கலைக்கல்லூரி தன்னாட்சி
கும்பகோணம்

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5058

பெண்ணைப் பெண்ணாகக் கட்டமைப்பதில் ஆணாதிக்கச் சமூகத்தின் பங்குகள் அளப்பரியன. ஆண் சமூகம் பெண்ணை உருவாக்கம் செய்கிறது. பல்வேறு பெண் கருத்தாக்கங்கள் பெண்ணைச் செம்மையாக வடிவமைக்கின்றன. பெண்ணின் பண்புகள், மாண்புகள், நடத்தைகள், ஒழுகும் முறைகள் முதலியன பெண் உருவாக்கத்தில் முக்கியக் காரணிகளாக உள்ளன. அவளது எல்லாச் சிந்தனைகளும் செய்கை களும் ஆண் வர்க்கத்தால் மிகுந்த சிந்தனையோடு தணிக்கைகள் செய்யப்படுகின்றன. இத்தகைய தணிக்கை நடவடிக்கைகளால் பெண்ணின் தனித்தன்மைகள் முற்றாக மழுங்கடிக்கப்படுகின்றன.

பெண்ணின் வாழ்வும் இருப்பும் ஆண் சார்ந்து நாளடைவில் மாற்றப்பட்டதை எண்ணி, பெண் உளச் சிக்கல்களுக்கு ஆட்படுகின்றாள். இந்த உளச்சிக்கல்களால் பெண்ணின் நிறைவேறாத ஆசைகளும் ஒடுக்கப்பட்ட எண்ணங்களும் அவளது நனவிலி நிலையிலிருந்துத் திமிறிக் கொண்டு சமூகத்தில் வெளிப்படுவதை உணரமுடிகின்றது.

ஔவையார், வெள்ளி வீதியார், ஆண்டாள், மாலதி மைத்ரி, குட்டி ரேவதி, சுகிர்தராணி, லீனா மணிமேகலை, புதிய மாதவி, வ. கீதா, மூ. ஜீவா, அ. மங்கை, சிவகாமி போன்றோர் பெண் புனைவுகளுக்கு எதிரான கட்டுடைப்புகளைத் தீவிரமாக முன் வைக்கின்றனர். இவர்களின் குரல் பல நூற்றாண்டுகளாக முடக்கப்பட்டப் பெண்களின் வெளிப்பாடாக காணப்படுகின்றன. பத்தினிப் பெண், நல்ல இல்லத் தலைவி, தெய்வத்தாய் போன்ற பெண் புனைவுகள் வலுப்பெறும் விதமாக பெண் சடங்குகள் நடைபெறுகின்றன. சடங்குகளனைத்தும் பெண்களை மையப்படுத்திய ஆண்களால் உருவாக்கப்பட்டுள்ளன. பிறப்பு, மாதவிடாய், திருமணம் விதவைச் சடங்குகள் என்பன பெண்ணை மனித சமூகத்திலிருந்து

புறம் தள்ளவும் ஓர் இரண்டாம் தரக் குடிமக்களாகத் தாழ்வுணர்ச்சி கொண்டு வாழவும் செய்து வருகின்றன. பெண் சடங்குகளில் அவளது விடுதலையும் வாழ்வுரிமையும் புதைந்து கிடக்கின்றது. அவற்றிலிருந்து பெண்ணை விடுவிக்க வேண்டும். அப்போது தான் பெண்மை, பெண்மைத் தன்மை, தாய்மை என்பன அடிப்படையான பெண் புனைவுகளிலிருந்து பெண் மெல்ல விடுபட முடியும்.

பெண்மை, நாணம், அச்சம், அடக்கம், கற்பு, சொல்லாடாமை, அழகு, வனப்பு முதலியவற்றோடு தொடர்புபடுத்தப்பட்டு, பிணிக்கப்பட்டு மொழியற்ற விலங்குகளைப் போல் வாழ்கிறாள். அவற்றோடு ஆண் சமூகம் அவளை இணைத்து வைத்துள்ளது. இத்தகைய கட்டமைப்புகள் கண்டிப்பாகக் கட்டுடைக்கப்பட வேண்டும். கட்டுடைத்தல் வாயிலாகவே பெண் மென்மையானவள், தாய்மை உடையவள் என்பனவற்றை கட்டுடைக்க முடியும். “நவீனப் பெண்கள் பலர் திருமணம், குடும்பம், குழந்தைப்பேறு, கற்பு இவற்றில் நம்பிக்கை இழந்தவர்களாகவும், அதே சமயத்தில் சுதந்திர மனப்பான்மையுடன் செயல்படுபவர்களாகவும் இனம் காட்டப்படுகின்றார்கள். மேலும், அப்பெண்கள் எந்நிலையிலும் உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டுத் துவளாமல் அறிவார்ந்த சிந்தனையும் அதனடிப்படையான செயல் திறனும் உடையவர்களாக உள்ளனர்.[1] என்னும் இரா. பிரேமாவின் கூற்று பெண் குறித்த புனைவுகளின் கட்டுடைத்தல்களை நயம்பட வெளிப்படுத்துகின்றது. இத்தகையப் பார்வையுடைய போக்குகள் தான் பெண்ணைப் பெண்ணாக அடையாளப் படுத்தும்.

உலகம் முழுவதிலும் உள்ள பெண்கள், சமூக ரீதியாகவும் குடும்ப ரீதியாகவும் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். பெண்கள் சுதந்திரமாகச் செயல்பட நினைக்கும் போதும், செயல்படுகின்ற போதும் ஆணாதிக்க வாதிகளால் தண்டிக்கப்படுகின்றனர். மக்கள் கூடுகின்ற பொது இடங்களில் பெண்களை நிறுத்தி அவர்களுடைய தலையை மொட்டையடித்தல், அரை நிர்வானப்படுத்துதல், கரும்புள்ளி செம்புள்ளி குத்தி கழுதையின் மேல் ஏற்றுதல்,

மண் கூடை சுமந்து ஊரைச் சுற்றிவரச் செய்தல். புளியம் சிம்பை வெட்டி விலக்கெண்ணை தடவி தீயில் வாட்டி அதனைக் கொண்டு அடித்தல், வெற்றிலை சீவல் போட்டு எச்சிலை உமிழ்தல் போன்ற தண்டனைகளை நிகழ்த்தியுள்ளனர்.

கணவனை விடுத்து பிறர் மீது காமம் கொள்ளும் பெண்களை ஊர்ப் பொது இடங்களில் தண்டித்தல், கணவன் மனைவி உறவைத் துண்டித்தல், ஊரையும் குடும்பத்தையும் விட்டுத் ஒதுக்கி வைத்தல், வன் புணர்ச்சி மேற்கொள்ளல் போன்ற வன்கொடுமைகளை இந்த சமூகம் நிகழ்த்தியுள்ளது. மன்னராட்சி காலத்தில் தோற்றுப்போன மன்னனின் நாட்டுப் பெண்களை அடிமைகளாகப் பிணைத்து நாடுகடத்துதல், படை வீரர்களுக்கும் தளபதிகளுக்கும் பரிசாக அளித்தல் போன்றவை பழங்காலத் தமிழ்ச் சமூகத்தில் நிகழ்ந்திருக்கின்றன. பெண்கள் உடைமைப் பொருளாகப் கருதப்பட்டுள்ளனர். “அரச மகளிர்களின் திருமணத்தின் போது அவர்களுடன் பெண்கள் பரிசுப் பொருளாகக் அளிக்கப்பட்டுள்ளனர்.[2] வெற்றி பெற்ற மன்னர்களுக்கு பெண்களைத் திறைப்பொருளாக அளிக்கின்ற வழக்கமும் இருந்திருக்கின்றது. உதயணனுடன் போரிட்டுத் தோற்ற மன்னன் வாசவதத்தையின் தாய்க்கு 110 மகளிரையும், கோபாலன் தாய்க்கு 20 மகளிரையும், கோபாலனுக்கும் பாலகுமாரனுக்கும் 60 மகளிரையும் கொடுத்ததாகப் பெருங்கதைக் காப்பியம் கூறுகின்றது. கணவனால் கைவிடப்பட்டப் பெண்கள் வாழ்நாள் முழுவதும் தம் காமத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். இன்பம் துய்க்க நினைக்கவோ பிற ஆடவனோடு தொடர்பு கொள்ளவோ பேசவோ கூடாது. கணவன் தன்னை விட்டு அகன்றதனால் இளம்பெண் ஒருத்தி பிற ஆடவரிடத்துச் சென்று தவறிழைக்கின்றாள். கொண்டோன் பிழைத்த குற்றம் என்று மன்னன் சதானிகன் இதற்குக்கடும்தண்டனைவழங்குகின்றான். “அவள் செய்த குற்றத்தையும் பெற்ற தண்டனையையும் பறையறிவித்து ஊர் முழுவதும் தெரிவிக்கச் செய்தான். பின் அரண்மனை ஊழியர்கள் அவன் மீது “செங்கல் பொடித்” தூவி இல்லந்தோறும்

*அவளை நிறுத்தி, அவளை இன்னாள் என்று இனங்காட்டி, வதைத்துப் பின் அவனை யமுனை ஆற்றில் மணற்குடம் கட்டி நீரில் மூழ்கும்படி செய்கின்றனர்.”*[3] உதயணன் அப்பெண்ணைக் காப்பாற்றுகிறான். என்பன போன்ற பெண்ணைப் பொருளாக, உடைமையாகப் பார்த்த நிலையை இலக்கியங்களும் வரலாறும் உணர்த்துகின்றன.

மேலைநாட்டுப் புனைகதைகள் பெண்களைச் சுதந்திர மானவர்களாகக் காட்டுகின்றன. பெண்கள் சுதந்திரமாக வாழ்வதற்கென்று கற்பனை உலகத்தை வால்ட் விட்மன். ஷெல்லி போன்றோர் படைத்துள்ளனர். இந்திய இலக்கியங்களும் தமிழ்ச் சூழலில் எழுந்த புனைகதைகளும் பெண்களை அடிமைத் தளையில் பிணைப்பதற்கான பணிகளை மேற்கொள்கின்றன. இது ஆணாதிக்கத்தின் முகமாக வெளிப்படுகின்றன. 1985-க்குப் பின் தோன்றிய புனைகதைகளில் ஆணாதிக்க வன்முறைகள் அடையாளம் காட்டப்பட்டன. அதிலும் குறிப்பாக, தலித் இலக்கியங்களில் முழுமையாக ஆணாதிக்க வன்முறைகளை அடையாளம் காட்டுகின்றன.

ஆந்திராவில் “மசித்குட்டா” என்ற கிராமத்தில் 07.10.1991 அன்று 5 பெண்களை நிர்வாணமாக்கி மொட்டையடித்து வீதிகளில் இழுத்துச் சென்று பாலியல் பலாத்காரம் செய்தனர். 41 என்னும் செய்தியை “தீக்கதிர்” (11.10.91) இதழ் வெளியிட்டது. அதற்கு எந்தவித சட்டபூர்வமான நடவடிக்கையோ, தீர்வோ கிடைக்கவில்லை. இந்த நிகழ்வு பெண்கள் மீது சமூகம் வைத்துள்ள மதிப்பைக் காட்டுவதாக உள்ளது. தேசிய குற்ற ஆராய்ச்சி நிறுவனம் 1993-இல் ஓர் அறிக்கையை வெளியிட்டது. அவ்வறிக்கையில் 54 நிமிடத்திற்கு ஒரு பெண் வீதம் பாலியல் பலாத்காரம் செய்யப்படுகிறாள். 2 மணி நேரத்திற்கு ஒரு பெண் வீதம் வரதட்சணைக் கொடுமையால் கொல்லப்படுகிறார்கள். 43 நிமிடத்திற்கு ஒரு பெண் வீதம் கடத்தப் படுகிறார்கள். 26 நிமிடத்திற்கு ஒரு பெண் வீதம் மானபங்கப்படுத்தப் படுகிறார்கள். 33 நிமிடத்திற்கு ஒரு பெண் வீதம் ஏதாவதொரு கொடுமைக்கு உள்ளாகிறார்கள்.[4] என்னும் செய்தி இடம்பெற்றது. இவ்வறிக்கியினை “ஏழையின் குமுறல்” என்னும் பத்திரிகை (சன-1993) வெளியிட்டுள்ளது. இந்தப் புள்ளி விவரம் நாட்டில் உள்ள அனைவருக்கும் அதிர்ச்சியளிப்பதாக உள்ளது. இந்த நிலை தற்காலத்தில் அதிகரித்த வண்ணம் உள்ளது.

மூன்றாம் உலக நாடுகள் எனப்படும் தைவான், தாய்லாந்து, பர்மா, பிலிப்பைன்ஸ், இந்தியா, சிங்கப்பூர் முதலான நாடுகளில் சுற்றுலா வளர்ச்சி என்ற பெயரில் பெண்களின் சதை வியாபாரம் (விபச்சாரம்) வியாபாரம் ஊக்குவிக்கப்படுகின்றது. இதனை மத அங்கீகாரம் கொடுத்து “தேவதாசி முறை” என்று நிலப் பண்ணையாளர்களும், பார்ப்பனர்களும் பாலியல் சுரண்டல் செய்து வந்தனர். தமிழகத்தில் இராஜராஜ சோழன் இந்த முறையை அறிமுகப்படுத்தி, அவர்களுக்கென்று கோயிலைச் சுற்றி வீடுகளும், இறையிலி நிலங்களும் கொடுத்தவன். இம்முறையை எதிர்த்து ஒரு பெண் பிரகதீசுவரர் ஆலய முகட்டிலிருந்து குதித்துத் தற்கொலை செய்து கொண்டிருக்கிறாள். காலந்தோறும் இத்தகைய நடைமுறைகளுக்கு எதிர்ப்பு எழுந்த வண்ணம் இருந்துள்ளன. “முற்காலத்தில் தாய்க் கடவுள் கோயில்களில் பெண்களே பூசாரிகளாக, தேவரடியார்களாக இருந்து வந்தனர். கோயில்களில் நிகழும் ஆண், பெண் சேர்க்கை புனிதமென்று போற்றப்பட்டது.”[5] பெண்கள் எளிதில் உணர்ந்து கொள்ளாதபடி தெய்வ நம்பிக்கைகளின் அடிப்படையில் அடிமைப்படுத்தப் பட்டதற்கு இந்நிகழ்வு சான்றாக அமைகின்றது.

தமிழகம் முழுவதும் உள்ள ஊர்ப்புறங்களில் பெண்கள் அதிக அளவில் நேரடியாக அடிமைப்படுத்தப்பட்டுள்ளனர். ஆணாதிக்க எண்ணம் கொண்ட படைப்பாளிகள்

தம் படைப்பின் வழிப் பெண்களை அடிமைப்படுத்தி வருகின்றனர். 2006, செப்டம்பர் 29-ஆம் நாளில் மகாராட்டிர மாநிலத்தில் நாக்பூருக்கு அருகில் "பண்டாரா" மாவட்டத்தில் "கயர்லாஞ்சி" என்னும் கிராமத்தில் பூட்மாங்கே - எனும் தலித் குடும்பத்தைச் சேர்ந்த "சுரேகா" என்ற தாயையும் "பிரியங்கா" என்ற மகளையும் சகோதர்களையும் ஆடையை உரித்து நடுத்தெருவில் கற்பழித்துக் கொன்றனர்.

தமிழகத்தில் 1989, செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் "போடி" என்னும் ஊரில் தேவர் - பள்ளர் இனத்தவர்களுக்கு இடையே இனக்கலவரம் நடைபெற்றது. அந்தக் கலவரத்தில் 50 வயதுடைய முத்துப்பிள்ளை என்றப் பெண்ணை தேவர் இனத்தவர்கள் கூட்டாக வன்புணர்ச்சி மேற்கொண்டனர். இத்தகைய நிலை பழங்காலம் முதலான நிகழ்ந்தபடியேயுள்ளன. "இளம் பெண்ணொருத்தி ஆற்றில் மிதந்து வந்த மாவின் பசுங்காய் ஒன்றைத் தின்றது காரணமாக இரக்கமின்றிக் கொலை புரிந்த நன்னன் என்னும் குறுநிலத் தலைவனைப் புலவருலகம் என்றும் வெறுத்து ஒதுக்கினர்.[6] என்னும் செய்தியினைப் புறநானூற்றில் காணமுடிகின்றது. பொருட்டாகக் கருதப்படாத காரணங்களுக்காகக் கூடப் பெண்கள் தண்டிக்கப்பட்டுள்ளனர். கொலை செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறாக உலக நாடுகள் முழுவதுமாகப் பெண்கள் பல்வேறு தண்டனைகளையும் வன்கொடுமைகளையும் அடைந்துள்ளனர்.

இளம் பெண்கள் மிகுதியாக பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாகின்றனர். தினசரி பத்திரிகைகளில் வரதட்சணையால் வீட்டிலிருந்து பெண்கள் விரட்டப்படுவதையும், கொல்லப்படுவதனையும், பிள்ளைகளோடு விசம் அருந்தி இறப்பதனையும், ஆறுகளிலும் கிணறுகளிலும் வீழ்ந்து உயிர் விடுவதனையும், வாயு உருளைகளும் அடுப்புகளும் வெடித்து இறப்பதனையும் செய்திகளாகப் படிக்க வேண்டியிருக்கிறது. சான்றாக 2011, நவம்பர் 22-ஆம் நாளிட்ட தினகரன் பத்திரிகையில் 2ஆம் பக்கத்தில் முத்துப்பேட்டையில் புதுப்பெண் ஆற்றில் விழுந்து தற்கொலை (திருத்துறைப் பூண்டி-சதீஷ்குமார் - பரமேஸ்வரி சந்தேகம், குடும்பத்தகராறு) என்னும் செய்தி இடம் பெற்றுள்ளது.

அதே பத்திரிகையில் 6-ஆம் பக்கத்தில், "அரிவாள் மனையால் மகளின் கழுத்தை அறுத்து, ஆசிரியர் தற்கொலை முயற்சி, மனைவிக்கும் வெட்டு" (மதுரை- மன உளைச்சல், தூக்கம் வரவில்லை என்பதற்காக) என்னும் செய்தி இடம் பெற்றுள்ளது. 7-ஆம் பக்கத்தில் "திருச்சி அருகே பயங்கரம் / ராணுவ வீரர் மனைவி கழுத்து நெரித்துக் கொலை" (விரோதம் காரணமாக) கற்பழித்துக் கொலை - தற்கொலையாக்க முயற்சி) என்னும் செய்தி இடம் பெற்றுள்ளது.

10-ஆம் பக்கத்தில் "பரவூர் சிறுமி பலாத்கார வழக்கை விசாரிக்க தனி நீதிமன்றம் - கேரள ஐக்கோர்ட் உத்தரவு" என்னும் செய்தி இடம்பெற்றுள்ளது. இத்தகைய வன் கொடுமைகள் நீங்க வேண்டும். இதே இதழில் "மகள்கள் கைவிட்டதால் மாடியிலிருந்து குதித்து மூதாட்டி தற்கொலை" என்னும் செய்தியும் இடம்பெற்றுள்ளது. ஆக தொடக்க காலம் முதலாக தற்காலம் வரை பெண்கள் மீதான வன்கொடுமைகளும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றன. இந்நிலை கண்டிப்பாக மாற வேண்டும். அதற்கான செயல்பாட்டில் பெண்ணிய அமைப்புகள் இறங்க வேண்டும். அப்போது தான் பெண்ணியம் விடியலைக் காண முடியும்.

பல்பொருள் அங்காடிகள், அடுக்கு மாடித் துணிக் கடைகள், நகை கடைகள், பல்பொருள் கடைகள், உணவு விடுதிகள், தொலைபேசி நிலையங்கள், ஆயத்த அணியகங்கள், புத்தகக் கடைகள், நவீனக் கழிவறைப் பராமரிப்பு, மருத்துவமனைகளில் வரவேற்பாளர், செவிலியர் பணியில், படியகங்கள்,

புகைப்படக் கூடங்கள், நிழற்படக் கூடங்கள் போன்றவற்றில் பணிபுரியும் பெண்கள் பாலியல் இடர்பாடுகளில் சிக்கித் தவிக்கின்றனர். பொருளாதாரம் அவர்கள் விடுதலைப்பெறவும் பகட்டு வாழ்க்கைக்கு உதவுகிறது என்பதுமான பெண்ணிய சித்தாந்தங்கள் ஈண்டு தலைகீழாய் மாறியிருக்கின்றன. இதனை பெண்களும் பெண்ணிய வாதிகளும் உணர வேண்டும்.

**அடிக்குறிப்புகள்**

1. முனைவர் இரா.பிரேமா, பெண் மரபிலும் இலக்கியத்திலும், ப.128.
2. இரா.பிரேமா, எழுத்தின் அடிப்படைகள், ப.68.
3. மேலது, ப.69.
4. பிரிட்டோ, வேர்களைத் தேடி, ப.68
5. மேலது, 67,
6. மேலது, 68.